பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை 05.01.2025 | அதிர்வு 157

## கிளிநொச்சியில் இளம் குடும்பஸ்தர் மின்சாரம் தாக்கிப் பலி

கிளிநொச்சி, கோரக்கன் காட்டுப் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## வவுனியாவில் 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

(கி.வசந்தன்)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2024 ஆம் ஆண்டு 41 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. 02

## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் 2 பேர் கைது



(கி.வசந்தன்)

ஒரு தொகை போதை மாத்திரைகளுடன் இருவரை வவுனியா விசேட அதிரடிப் படையினர் இன்று கைது செய்துள்ளனர். 02





### வடக்கு – கிழக்கு இணைந்த தீர்வே வேண்டும்

# புதிய அரசமைப்பு தொடர்பில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு

### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தீர்மானம்

(கி.வசந்தன்)

"வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ் மக்கள் சுயாட்சியுடன் வாழக்கூடிய அரசமைப்பைப் புதிய அரசு உருவாக்க வேண்டும். அத்துடன் மகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தி அதற்கான அதிகாரங்களை முழுமையாக வழங்க வேண்டும். இது தொடர்பில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம்."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். 03



# கஜேந்திரகுமாரின் பேச்சுக்கான அழைப்புக் குறித்து தமிழரசுடன் கலந்துரையாடவுள்ள சிறீதரன்



## அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்றும் வலியுறுத்து

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்னவென்பது குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாடொன்றுக்கு வரவேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகளை அடுத்து எதிர்வரும் காலத்தில் அரசால் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, குறைந்த பட்சம் அவ்விடயத்தில் மாத்திரமேனும் தமிழ்த் தேசியக் கட்சிகள் 02

# வவுனியாவில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நினைவேந்தல்!





(கி.வசந்தன்)

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவேந்தல் தினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியாவில் இன்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

அவர்கள் போராட்டம் மேற்கொள்ளும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள கொட்டகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்தியிருந்தனர்.




## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கஜேந்திரகுமாரின்...

ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அதனை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைக் கடந்த மாதம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அதன்போது தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தன் அவசியத்தைச் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட வரைவு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் 7ஆம் திகதி பாராளுமன்றம் கூடவிருக்கும் நிலையில், அன்றைய தினம் சிறீதரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் கலந்துரையாடி அச்சந்திப்புக்குரிய திகதியைத் தீர்மானிக்கவிருப்பதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கின்றார்.

இது பற்றி சிறீதரனிடம் வினவியபோது, தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை எனவும், அதனை இலக்காகக்கொண்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

அதேவேளை இது குறித்து முதலில் தமது கட்சிக்குள் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டிய அவர், அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகள் கொள்கை ரீதியில் பொது நிலைப்பாடு ஒன்றுக்கு வரவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

எது எவ்வாறிருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடாமல் தமிழர்களுக்கு வரலாறு இல்லை எனவும் சிறீதரன் சுட்டிக்காட்டினார்.

### போதை மாத்திரைகளுடன்...

வவுனியா பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸை வவுனியா புதிய பஸ் நிலையத்தில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அதனை உடமையில் வைத்திருந்த தென்பகுதியைச் சேர்ந்த இரண்டு நபர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டதுடன் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### கிளிநொச்சியில்...

மேற்படி நபர் நேற்று நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தில் திருத்த வேலை செய்து கொண்டிருந்தபோதே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பிரான்சித் ரஜீவன் என்ற 31 வயதுடைய வயிரவர் கோயிலடி, பரந்தனைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வவுனியாவில்...

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுபோகம் மற்றும் பெரும் போகம் போன்ற நெற் பயிற்செய்கை காலங்களில் எலிக்காய்ச்சல் தொற்று கடந்த காலங்களில் குறிப்பிட்டளவு பதிவாகியிருக்கின்றது.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 41 பேர் எலிக்காய்ச்சல் நோயினால் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்கு சென்றுள்ளனர் என்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி







## புதிய அரசமைப்பு தொடர்பில்...

வவுனியா, கோவில்குளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை இடம்பெற்றது. இதன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலுும் தெரிவிக்கையில்,

“நடந்து முடிந்த தேர்தல் தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இரண்டு தடவைகள் இணைய வழி ஊடாகப் பேசியுள்ளோம். இன்றைய கூட்டத்தில் வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேசினோம். அத்துடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைக் கிராம மட்டங்களில் பலப்படுத்தல் தொடர்பாகவும் பல்வேறுபட்ட ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

முக்கியமாக எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியாகத் தற்போது அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் போட்டியிடும். அத்துடன் எம்முடன் இணைந்து பயணிக்கக் கூடிய ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேசி அவர்களும் இணங்கும் பட்சத்தில் இணைந்து போட்டியிடவுள்ளோம்.

வடக்கு,கிழக்குமாகாணங்களில்தமிழ்த் தேசியப் பரப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழ்க் கட்சிகளுடன் இது தொடர்பில் பேசுவதாகவும் தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி முதலாவது வாரத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாநாட்டை வவுனியாவில் நடத்தத் தீர்மானித்துள்ளோம். அதற்கு முன்னதாக மாவட்ட நிறைவேற்றுக் குழுக்கள் கூடி என்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் எனவும் தீர்மானிப்பார்கள். அதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய ஓர் அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த வேண்டி தேவையும் பொறுப்பும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு இருக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் என்பது சரியான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும என்பதில் நாம் ஆணித்தரமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றோம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருக்கக் கூடிய புதிய அரசு வந்திருக்கின்றது.

புதிய அரசு ஒரு மாற்றத்தை உருவாக்கப் போவதாக சொல்லியிருக்கின்றார்கள். நிர்வாகத்தில் மாற்றம், அரசியலில் மாற்றம், ஊழல் இல்லாத நிர்வாகத்தை ஏற்படுத்துவது எனப் பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது எம் மக்களது கருத்தாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட ஒரு மாற்றம் ஏற்படும் என்பதற்காகத்தான் அந்த வாக்குகளும் அளிக்கப்பட்டன என்று நாங்கள் கருதுகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்கள் மத்தியில் 75 வருடங்களாகத் தேசிய இனப்பிரச்சினை புரையோடிப் போயுள்ள பிரச்சினையாக இருக்கின்றது. அது தீர்க்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு புதிய அரசிடம் இருக்கின்றதா என்ற கேள்வியும் எம்மிடம் இருக்கின்றது.

கடந்த 7 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. மாகாண சபைத் தேர்தல் என்பது இந்த வருட இறுதியில் நடத்தப்படும் எனக் கூறுகின்றார்கள். தாமதமாக நடத்த வேண்டும் என்ற தேவை இருக்காது. அல்லது அதற்கு முன்பு நடத்தலாமா போன்ற கருத்துக்கள் எம் மத்தியில் பேசப்பட்டன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்து ஓரிரு மாதங்களில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என நாம் நம்புகின்றோம். மாகாண சபைக்கு உரித்தான 1988 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைதது அதிகாரங்களும் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த அரசு மிக விரைவாக அந்த நடவடிக்கைகளை எடுத்தால் மாத்திரம்தான் தமிழ் மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் எனவும் நாம் கருதுகின்றோம்.

ஆகவே, அரசு வெறுமனே பேச்சில் மாத்திம் இருக்காமல் தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு புதிய அரசியல் சாசனம் கொண்டு வரப்பட வேண்டும். அது வெறுமனே சிங்கள மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதாக இல்லாது புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவது தொடர்பாக அரசு சரியான அறிவிப்புக்களை வெளியிடுமாக இருந்தால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு – கிழக்கு இணைந்த ஒரு தமிழ் மாநிலத்தை உருவாக்கி முழுமையான சுயாட்சியை உருவாக்குவதற்கான கருத்துக்களை அல்லது அறிக்கைகளை எல்லோருடனும் இணைந்து புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் குழுவிடம் கொடுப்போம். முதலாவது இந்த அரசு குழுவை நியமிக்க வேண்டும். அதனை இரண்டு வருடங்களிலா அல்லது மூன்று வருடங்களிலா அல்லது உடனடியாக நியமிப்பார்களா என்பது எங்களுக்குத் தெரியாது.

புதிய அரசியல் சாசனம் உருவாக்கும் பட்சத்தில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அத்துடன் மக்கள் மத்தியில் வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும். அவ்வாறு விடப்பட்டால்தான் அது நிறைவு பெறும். மக்கள் மத்தியில் சென்று அதற்கான ஆதரவைத் திரட்ட வேண்டுமாக இருந்தால் இந்த அரசு விரைவாக புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். அப்போதுதான் சாத்திய மாகலாம். காலம் செல்ல ஆட்சியின் மீதும், ஆட்சி அதிகாரம் மீதும் பல்வேறு குறைபாடுகள் வரும். அதற்கு முன்பாக அரசியல் சாசனம் வர வேண்டும் என விரும்புகின்றோம்.

அதில் முக்கியமாக தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினைக்குப் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக தமிழ் மக்கள் இந்த மண்ணில் முழுமையான சுயாட்சியோடு வாழ்வதற்குத் தேவையான விடயங்களை உள்ளடக்கிய ஓர் அரசியல் சாசனமாக இருக்க வேண்டும் என நாம் பேசியுள்ளோம். இது தொடர்பில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.” – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோ.கருணாகரம், எம்.கே.சிவாஜிலிங்கம், ந.சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் ப.வேந்தன் உட்பட முக்கிஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.





# காற்றாலை மின் திட்டத்துக்கு செல்லும் வீதி புனரமைப்பு!

## தாழ்வுப்பாடு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் மக்கள் செறிந்து வாழும் பகுதியான கடற்கரையை அண்டிய பகுதியில் காற்றாலை அமைக்கும் நோக்குடன் வீதியை புனரமைப்பதற்கு துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ள நிலையில் அப்பகுதி மக்கள் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தாழ்வுபாடு பகுதியில் காற்றாலை மின் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காகவே கடற்கரை வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது என்று அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கடற்கரை வீதிக்கு வந்த மக்கள் வீதி புனரமைப்பில் ஈடுபட்டிருந்தவர்களுடன் வேலையை நிறுத்துமாறு தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற அருட் தந்தையர்கள் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து பேச்சுகளில் ஈடுபட்டனர். இந்த நிலையில் வீதி புனரமைப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் வேலையை இடை நிறுத்திச் சென்றனர்.

இது குறித்து கிராம மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

இவ்வீதியைப் புனரமைப்பதற்காகக் கடற்கரையை அண்டிய பகுதியில் மணல் அகழப்பட்டு வருகிறது. அத்தோடு ஆயிரக் கணக்கான பயன் தரும் மரங்கள் இந்தத் திட்டத்துக்காக அடியோடு பிடுங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலத்தில். மன்னாரில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது பல நூற்றுக் கணக்கான வீடுகள் நீரில் மூழ்கி இருந்தன. இவ்வாறான நிலையில் இந்த கடற்கரை ஓரங்களில் மண் அகழ்வது மற்றும் மரங்கள் பிடுங்கப்படுவது மண்ணரிப்பை ஏற்படுத்தும். அத்தோடு கடல் நீர் கிராமத்துக்குள் புகும் அபாயமும் ஏற்படுகின்றது.

எனவே இந்தத் திட்டத்துக்கு நாங்கள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம் என்று தெரிவித்தனர்.



# ஐஸ் போதைப் பொருளுடன் இறக்காமத்தில் இளைஞன் கைது!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ் )

ஐஸ் போதைப் பொருளை மோட்டார் சைக்கிளில் விற்பனை செய்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். அத்தோடு மோட்டார் சைக்கிளையும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றி உள்ளனர்.



இச்சம்பவம் நேற்று (04) சனிக் கிழமை நடைபெற்றது.

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதுநகர் வீதியில் ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனைவிசேடஅதிரடிப்படையினரால் இந்த இளைஞன் கைது செய்யப் பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப் படையி னருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகத்துக்கு இடமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பின் தொடர்ந்த விசேட அதி ரடிப் படை அதிகாரிகள் அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கைகளின் போது, இறக்காமம் 03 பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய் யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் இருந்து 25 கிராம் 440 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. அத்துடன் சந்தேக நபர் மற்றும் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், குறித்த சோதனை நட வடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க தலைமையில் முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விதைத்த வினை

கடந்த வாரம் முடிவடைந்த 2024 ஆம் ஆண்டில், நாட்டில் நூறுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் 61 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 47 பேர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் பெரும்பாலான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணம் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் 56 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்புடையவை எனவும், இதில் 45 பேர் உயிரிழந்துள்ளமை தங்கள் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

16 பேர் கொல்லப்பட்ட மற்ற 47 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் வெவ்வேறு காரணங்களால் - குறிப்பாக தனிப்பட்ட தகராறுகளால் - நிகழ்ந்தவை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் வடக்கு கிழக்குக்கு வெளியில் - தென்னிலங்கையில் - நடைபெற்றவை. பெரும்பாலான சம்பவங்களின் பின்னணியில் தென்னிலங்கையை ஆட்டிப் படைக்கும் பாதாள உலகக் குழுக்கள் தொடர்பு பட்டிருக்கின்றன.

உண்மையில் யுத்தத்தின் முடிவில் பாதாள உலகக் குழு உருவாகக்கூடிய களமும் சூழலும் தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கில்தான் பொருத்தமாக இருந்தது.

வடக்கு கிழக்கில் இயங்கிய தமிழர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் பலவற்றைச் சேர்ந்த பல்லாயிரம் தமிழ் இளைஞர்கள் திடீரென அவரவர்களது இயக்கங்களில் இருந்து வெளியே அநாதரவாக விடப்பட்டனர். சமூகத்தில் உரிய வாழ்வாதாரங்கள் இல்லாமல் நட்டாற்றில் அவர்கள் விடப்பட்ட போது வருமானத்துக்கு வழி இல்லாத சிக்கலில் அவர்கள் இருந்தனர். அவர்கள் கணிசமானோர் பாரிய ஆயுதங்களை கையாளக்கூடிய தகைமையும் பயிற்சியும் பெற்றவர்களாக இருந்தனர். தவிரவும் பல இயக்கங்களின் ஆயுத சேகரிப்புகள், களஞ்சியங்கள் படையினரால் கைப்பற்றப்படாமல் வடக்குக் கிழக்கில் இன்னமும் கூட தேங்கி கிடக்கின்றன என்ற பேச்சு உண்டு. இந்தச் சூழ்நிலைகள் வடக்கு, கிழக்கில் பாதாள உலகம் குழுக்கள் - ஆயுத அணிகள் - செயல்படக்கூடிய களச் சூழ்நிலையைத் தந்து நிற்கின்றன.

ஆயினும், வடக்கு - கிழக்கில் இத்தகைய ஆயுதக் குழுக்கள் எதுவும் யுத்தத்தின் பின் உருவாகவும் இல்லை. செயற்படவும் இல்லை.

ஆனால் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - தமிழ்ப் போராளிகளோடு யுத்தம் புரிவதற்காக பல்லாயிரம் பேரை அரைகுறை தயாரிப்புகளுடனும் ஆயுத களஞ்சியங்களுடனும் வடக்கு கிழக்குக்கு அனுப்பி வைத்த தென்னிலங்கை இன்று தனக்குள் உருவாகி, ஊடுருவி, நிலை கொண்டிருக்கும் ஆயுத அணிகளை - பாதாள குழுக்களை - கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றது. பாதாள உலகக் குழுக்கள், ஆயுத அணிகள் என்பவற்றை 'ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுத குழுக்கள்' என்ற பெயரில் பொலிஸ் தரப்புக் கையாண்டாலும் அவை பாதாள உலகக் குழுக்களே.

தமிழ் போராளிகளை வேட்டையாடுவதற்காக ஆயுதங்களை விதைத்த தென்னிலங்கை, இப்போது யுத்தம் முடிவடைந்த பின்னரும் விதைத்த வினையின் விளைவை அறுவடை செய்து கொண்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் உருவாக வேண்டிய ஆயுத குழுக்கள் மாறாக தென்லங்கையில் மட்டும் உருவெடுத்து இருக்கின்றமைக்கான காரணங்கள் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. அவற்றை தனியாக, விவரமாக ஒரு தடவை இப்பத்தியில் பிறிதொரு முறை நோக்குவோம்.



# சந்நிதியான் ஆச்சிரமத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பா ட்டு பேரவையால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் கடந்த வெள்ளிக்கிழமை மங்கள இசை, கௌரவிப்பு நிகழ்வுகள், உதவி வழங்கல் ஆகியன நடைபெற்றன.

முதல் நிகழ்வாக சண்முகவடிவேல் பாலேந்திரம் குழுவினரின் மங்கள இசை இடம்பெற்றது. இதில் தவில் – சண்முகசுந்தரம், பாலேந்திரம் முத்தையா குணரத்தினம், நாதஸ்வரம் – முருகதாஸ் கோபிநாத், திருமதி சுந்தரம் தையல்நாயகி ஆகியோர் அணி செய் கலைஞர்கள்.

இரண்டாவது நிகழ்வாகஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளுக்கு, டான் தொலைக்காட்சி குழுமத்தால் 2024 ஆம் வருட சாதனைத் தமிழன் விருது வழங்கப்பட்டது. இதனைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு டான் குழும பணிப்பாளர் எஸ். எஸ். குகநாதனின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் அமுதகலாசுரபி கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் டான் குழுமப் பணிப்பாளர் எஸ். எஸ். குகநாதனுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இறுதியாக அம்பாறை மாவட்டத்திலுள்ள மாணிக்கமடு கிராமத்தில் அமைந்துள்ள வில்லூன்றி விநாயகர் ஆலயத்தின் அடிப்படைத் தேவையான மலசலகூடம் அமைப்பதற்காக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.





# அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் வாகனங்கள் பயன்படுத்தத் தடை

## சம்மாந்துறை பொலிஸார் அறிவுறுத்தல்


(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக ஒளி மற்றும் ஒலி எழுப்பும் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களைப் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களில் பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பிக்கும் போது அல்லது முடிவடையும் போது பெண் பிள்ளைகளுக்கு தொந்தரவு செய்யும் குறித்த நபர்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்குமாறும் சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தகவல் தருபவரின் இரகசியம் பாதுகாக்கப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் 0672 260 222 என்ற எண்ணுடன் தொடர்பு கொண்டு குறித்த நபர்கள் பற்றிய தகவலை அறிவிக்குமாறும் கேட்டுள்ளனர்.






# மருதமுனை ஜமீல் எழுதிய ‘காலம் ஒரு வேட்டை விலங்கு’ நூல் வெளியீட்டு விழா!

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

கிழக்கிலங்கையின் மருதமுனையை சேர்ந்த ஏ.ஆர். அப்துல் ஜமீல் எழுதிய “காலம் ஒரு வேட்டை விலங்கு” கவிதை தொகுதி நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (18) மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நினைவரங்கில் புதுப் புனைவு பதிப்பகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகை தரு விரிவுரையாளர் கலாநிதி பிர்தௌஸ் சத்தார் தலைமையில் ஓய்வு நிலை பதிவாளர் கவிஞர் மன்சூர் ஏ. காதர் முன்னிலை அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

ஊவா வெல்லச பல்கலைக் கழகத்தின் பதிவாளர் எம்.எம்.ஹிபத்துல் கரீம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம்.நுபைல், கிழக்கு பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம். எப். மர்சூக் , தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எம். பைறோஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரி கவிஞர் எம்.எம். நௌபல், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் றீ.எம். ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

நிகழ்வில் முதன்மைப் பிரதிகளை மருதமுனை ஜாஹி வீவர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஐ. உபைதுர் ரஹ்மான், அல்-மனார் மத்திய கல்லூரியின் உதவி அதிபர் எம்.எஸ். நிகால், திடீர் மரண விசாரணை அதிகாரி பி.பஹட் ஸமான், மெரீடியன் கபே உரிமையாளர் எம். எச். எம்.நியாஸ் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நினைவு பிரதியை ஏ.ஆர்.ஹிபத்துல்லாஹ் பெற்றுக் கொள்வார்.

நூல் மீதான வாசிப்பை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர், எழுத்தாளர் அப்துல் றஸாக், கவிஞர் ஜிப்ரி ஹாசன், கவிஞர் டீன் கபூர் ஆகியோர் நிகழ்த்துவர். எம்.எம். நாளில் நெறியாழ்கையில் நிகழ்வு இடம்பெறும்.





# முன்பள்ளி மாணவர் விளையாட்டு விழா

(எம். எப். றிபாஸ்)

நிந்தவூர் பிரதேச சபையின் வழி காட்டலின் கீழ் இயங்கிவரும் அல் ஹிக்மா முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் நேற்று (04) இடம் பெற்றது.

பிரதேச சபையின் செயலாளர் எஸ். ஷிஹாபுத்தீன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் பிரதம அதிதியாகவும், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ. எல்.றியாஸ், ஏ. அஸ்பர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக்கில் போட்டி நிகழ்வுகளும், கலை, கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன. வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் நினைவுச் சின்னங்களும், சான்றுதழ்களும் வழங்கப்பட்டன.




# மன்னார் புனித வெற்றி அன்னையின் வருடாந்த ஆசீர் வழங்கும் நிகழ்வு இன்று

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறை மாவட்டத்தில் இருநூறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் பேசாலை பகுதியில் அந்தப் பகுதி மக்களின் பாதுகாவலாகக் கோயில் கொண்டு இருக்கும் புனித வெற்றி அன்னை வருடத்தில் ஒரு முறை சிம்மாசனத்தில் இருந்து இறக்கப்பட்டு மக்களுக்கும் இந்தக் கிராமத்துக்கும் ஆசீர்வதிக்கும் ஒருநாளாக வருடப் பிறப்புக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக் கிழமை பேசாலை மக்களால் மிக சிறப்பாக கொண்டாடப்படுவது வழமை.

இந்த வகையில் பேசாலை பதியானது முன்னோர் காலத்திலிருந்து மூவியரசர் பட்டினம் என்ற பெயர் சூட்டப்பட்ட ஒரு பதியாக இன்றும் திகழ்ந்து வருகின்றது.

இந்த வகையில் பேசாலை கத்தோலிக்க மக்கள் இந்த நாளை இன்று ஞாயிற்றுக்கிழமை (05) தங்கள் பகுதியில் ஏனைய திருவிழாக்களைவிட மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.

காலை பெருவிழா திருப்பலி முடிவுற்றதும் 10 மணியளவில் சிம்மாசனத்தில் வீற்றியிருக்கும் புதுமைமிக்க புனித வெற்றி அன்னை செப வழிபாட்டுடன் சிம்மாசனத்தில் இருந்து இறக்கப்பட்டு அன்னையின் கரங்களில் இருக்கும் குழந்தை இயேசுவை பெற்று குழந்தை பாக்கியம் அற்ற குடும்பத்தினர் அருட்பணியாளரிடமிருந்து தங்கள் கரங்களில் அந்த குழந்தை இயேசுவை பெற்று முத்தம் செய்து ஆசீர் பெற்று செல்லும் திருச்சடங்கு இடம்பெற்றது.

இந்த புனித நிகழ்வு பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.






# கட்டுகலை செல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சபாநாயகர்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன இன்று (05) வரலாற்று பிரசித்தி பெற்ற கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயத்துக்கு விஜயம் செய்தார்.

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கலாநிதி பி.பி. சிவப்பிரகாசம் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந் தார்.

அங்கு ஆலய அறங்காவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட நிர்வாக சபையினர் சபாநாயகரையும் குழுவினரையும் வரவேற்றனர். விசேட பூஜை வழிபாடும் அங்கு இடம் பெற்றது.

முன்னதாக சபாநாயகர் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகா நாயக்கர்களையும் சந்தித்து ஆசி பெற்று கலந்துரையாடினார்.








# பிரதிக்கல்விப் பணிப்பாளர் அகமட் கியாஸ் கௌரவிப்பு

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப் பாளராக கடமையாற்றி கல்விப் பணியில் இருந்து அண்மையில் ஒய்வு பெற்றுச் சென்ற அ.ஸ.அப்துல் கியாஸ் ஸுக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை (05) அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் அதிபர் சங்க தலைவர் எம்.ஐ.எம். உவைஸ் தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கோட்ட அதிபர்கள் சங்கத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 36 வருட காலம் ஆசிரியராக, பிரதிக் கல்விப் பணிப்பா ளராக கல்விப் பணியாற்றியுள்ளார்.

நிகழ்வில் அ.ஸ.அப்துல் கியாஸ், கோட்ட அதிபர்களால் பொன்னாடை போர்த்தி, வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் கலந்து கொண்டார். அக்கரைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல். செய்னுடீன் உட்பட பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.



# அஸ்வசும இரண்டாம் கட்ட பதிவு இந்த மாதம் ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)

அஸ்வசும இரண்டாம் கட்ட பதிவு நடவடிக்கை அகில இலங்கை ரீதியாக இந்த மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதற்கான பயிற்சி கருத்தரங்குகள் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் இடம்பெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக காரைதீவு பிரதேச செயலாளர் க.அருணனின் வழிகாட்டலின் கீழ் காரைதீவு உதவி பிரதேச செயலாளர் செ.பார்த்திபன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக அம்பாறை மாவட்ட செயலக புள்ளி விவர அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.முன்சீப், காரைதீவு பிரதேச செயலக புள்ளி விவர அபிவிருத்தி



உத்தியோகத்தர் சிராஜ் முனீர் ஆகியோர் பங்கு பற்றி விளக்கம் கொடுத்தனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உத்தியோகத்தர் அஹமட் அஸ்ரி, காரைதீவு பிரதேச செயலக நலன்புரி நன்மைகள் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.சுபராஜ், அபிவிருத்தி உத்தியோகத்தர் கி. ஜெயந்தகுமாரி மற்றும் இந்த முறை பிரதேச எண்ணீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# உலகம் போற்றும் ஆத்மிக அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் நூற்றாண்டு!

**சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை (07) தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்திலும் மறுநாள் புதன்கிழமை (08) நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் இடம்பெற உள்ளது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஈழத்திருநாடு செய்த மாதவத்தால் 1925 ஆம் ஆண்டு ஜனவரி ஏழாம் நாள் தெல்லிப்பழை மண்ணில் உதித்தவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி.

நிறைந்த கடவுள் பக்தியுடைய அப்பாக்குட்டி தையல்பிள்ளை தம் பதியினருக்கு புத்திரியாகப் பிறந்தவர் அன்னை.

சிறுவயதிலேயே ஆத்மிக நாட்டத்துடன் தேவாரா திருவாசகத்தை மனனம் செய்வதில் அக்கறை கொண்டவர். தனது ஆரம்பக்கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சி கலாசாலை வாழ்வுவரை முதன்மை மாணவியாகத் திகழ்ந்தவர்.

இளம் வயதிலேயே பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். சைவப் புலவர் பரீட்சையிலும் தோற்றி சிறந்த பெறுபேறு பெற்றார். ஐம்பதுகளில் மேடைப் பேச்சில் அறிமுகமாகி சமய பிரசங்கம் செய்வதில் வல்லவரானார்.

மட்டக்களப்பிலுள்ள சென். சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும், கொழும்பிலுள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையிலும் ஆசிரியராகவும் பணியாற்றியவர். 1958 இல் நடைபெற்ற கலவரத்தின் பின்னர் அளவெட்டி சதானந்தப் பாடசலையிலும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமையாற்றி ஆத்மிகப் பணிக்காக அறுபது வயதுக்கு முன்பே ஒய்வு பெற்றார்.

பெண்கள் மேடைக்கு ஏறுவதில் அஞ்சிய காலத்தில் ஆன்மிக மேடைகளிலும் இலக்கிய மேடைகளிலும் தனது ஆற்றலை மேம்படுத்தி பெரும் புகழைப் பெற்றவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தனது சொல்வன்மையால் பலரது மனங்களை ஈர்த்தவர்.

1965 இல் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபையில் இணைந்து 2008 ஆம் ஆண்டுவரை மிக அர்ப்பணிப்போடு தேவஸ்தான வளர்ச்சியில் செயற்பட்டவர். தேவஸ்தான தனாதிகாரியாகவும் பின் தலைவராகவும் ஒப்பற்ற பணியாற்றியவர். சிறிய கோயிலாக விளங்கிய ஆலயத்தை தேசம் போற்றும் கோவிலாக மாற்றிய பெருமை அவரையே சாரும்.

அறச் சிந்தனை நிறைந்த அம்மையார் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தை அறச்சாலையாக மாற்றினார்.

1982 ஆம் ஆண்டு துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைத் தோற்றுவித்து ஆதரவற்ற பெண் பிள்ளைகளை அரவணைத்து அவர்கள் வாழ்வுக்காக அயராது உழைத்தார்.

அம்மையாரின் உயர்ந்த தொண்டால் தேவஸ்தானப் பணிகள் விரிவடைந்தன. நல்லூரில் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தைஅமைத்து நல்லூர் கந்தனைத் தரிசிக்கும் அடியவர்களின் பசிபோக்கும் அன்னதானப் பணியை ஆரம்பித்து வைத்தார்.

ஏழைகளின் சிரிப்பில்இறைவனைக் காண்போம் என்ற சுவாமி விவேகானந்தரின் சிந்தனையை மனதில் நிறுத்தி பல மறுமலர்ச்சித் திட்டங்களை எம் மண்ணில் ஏற்படுத்திய பெருமை அம்மையாரையே சாரும். போரால் இடம்பெயர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தஞ்சமடைந்த பல ஆயிரம் அகதிகளுக்கு அன்னம் பாலித்து ஆதரவு வழங்கியவர் அம்மையார். ஆலயத்தில் திருமுறைமடம் அமைத்து பன்னிரு திருமுறைகளைச் சைவ மக்கள் பாதுகாக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டவர்.

பல மேடைகளில் அறக்கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறி சமூகத்தை விழிப்படையச் செய்தார். கோயில்களில் நடைபெறும் மிருக பலியை எதிர்த்தார். கோயில்களில் பெண்கள் பஞ்சபுராணம் பாடவேண்டும், கூட்டுப் பிரார்த்தனை செய் ய வேண்டும், தொண்டுப் பணிகளில் ஈடுபட வேண்டும் எனக் குரல் கொடுத்தார்.

ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தில் பெண்கள் தொண்டர் சபையை அமைத்தார். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்துக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களை ஆற்றுப்படுத்தினார். சமயத்தொண்டு, இலக்கியத ் தொண்டு ஆற்றிய சான்றோர்களுக்கு விருது கொடுத்துக் கௌரவித்தார். அம்மையாரின் தூய பணிகள் என்றும் மறக்க முடியாது.

என்னைப் போன்ற ஆன் மிகப் பேச ்சாளர்களை ஊக்குவித்தார். 1993 இல் தனது பிறந்த நாள் அறநிதியச் சபையை அமைத்தார். 1995 இல் வயதில் குறைந்த என்னை தேவஸ்தான நிர்வாக சபையில் சேர்த்து மதிப்புத் தந்தார். சுமார் பதின்னாங்கு ஆண்டுகள் அம்மையாரின் தலைமையில் தேவஸ்தான நிர்வாக சபையில் இணைச் செயலாளராகப் பயிற்சி பெறும் வாய்ப்பைப் பெற்றேன். அம்மையாரிடம் யான் கற்றவை ஏராளம். இன்று அம்மையாரின் பொறுப்புகளை யான் தலைமையேற்று நடத்துவதற்கு அவரிடம் பெற்ற உன்னதப் பயிற்சியே



காரணம் எனலாம்.

சிறியேனை மிக அன்பாக ஆற்றுப்படுத்திய தாய், எனது வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றார். 2008 ஆம் ஆண்டு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைமைப் பொறுப்பையும் துர்க்காபுரம் மகளிர் இல்ல தலைமைப் பொறுப்பையும் ஏற்ற யான் துர்க்கையம்மனின் நல்லருளாளும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியாலும் அவர்பணி தொடர வாய்ப்புக் கிட்டியது.

அம்மையார் இறைபதம் அடைந்த பின் அம்மையாருக்கு ஒரு உருவச் சிலை தேவஸ்தானத்தில் நிறுவப்பட்டது. அது மட்டுமன்றி அம்மையாரின் அஸ்தியை பேழையில் கொண்டு வந்து ஆலய மேற்கு திசையில் நினைவாலயத்தை நிறுவி வழிபாடு செய்து வருகின்றோம். ஆண்டு தோறும் அம்மையாரின் பிறந்த நாளில் அறக்கொடை விழாவும் அம்மையார் இறைபதம் அடைந்த நாளில் குருபூசையும் எமது தேவஸ்தானம் செய்து வருகின்றது.

அம்மையாரின் பெயரால் ஆண்டு தோறும் ஏழை மாணவர்களுக்கான கல்வி நிதியம், வைத்தியசாலைகளுக்கான உதவிப் பணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

ஈழத்திருநாடு செய் த புண்ணியத்தால் இத்தகைய ஒரு புனிதப்பிறவி எம்மண்ணில் பிறந்து மாபெரும் சாதனைகளைச் செய்து தனது எண்பத்தி மூன்றாவது வயதில் விண்ணகம் நோக்கிச் சென்றுவிட்டது.

இவரைப் போன்ற அரிய மனிதர்களை தேடுவது என்பது இன்று கடினமாகி விட்டது. அர்பணிப்பு மிக்க அறம் காத்த தாயை மறக்க முடியாது. அன்னார் பிறந்து நூறு ஆண்டுகள் நிறைவடையும் வேளை, இவரை நீளநினைந்து வழிபாடு செய்வதே எம்கடனாகும். அன்னையே உம்மை இனி எப்பிறப்பில் காண்போம் அம்மா!



**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.

# ஜம்மு காஷ்மீரில் இராணுவ வாகனம் பள்ளத்தாக்கில் விழுந்து விபத்து

## 3 வீரர்கள் உயிரிழப்பு



இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பந்திபோரா மாவட்டத்தில் இராணுவ வாகனம் பள்ளத்தாக்கில் விழுந்ததில் 3 வீரர்கள் உயிரிழந்துள் ளனர். இருவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக இராணுவ செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட தகவலில்,

"வடக்கு காஷ்மீரின் பந்திபோரா மாவட்டத்தில் சாலை விபத்தில் மூன்று வீரர்கள்உயிரிழந்துள்ளனர் இரண்டு பேர் காயமடைந்தனர்.

சீர்ற்ற வானிலை மற்றும் மோச மான பனிபொழிவு காரணமாக வாகனம் பள்ளத்தாக்கில் விழுந்தது. காயமடைந்த வீரர்கள் உள்ளூர் வாசிகளின் உதவியுடன் மருத்துவ சிகிச்சைக்காக உடனடியாக அனுப்பப் பட்டனர்." - என்றார்.

# அண்ணா பல்கலைக்கு வெடிகுண்டு மிரட்டல்

அண்ணா பல்கலைக் கழகத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததைய டுத்து, அங்கு பொலிஸார் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக் கழகத்துக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் நேற்று காலை வந்துள்ளது. பல்கலைக் கழக நிர்வாகம் இது குறித்து பொலி ஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து அங்கு விரைந்து வந்த கோட்டூர்புரம் பொலிஸார், வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உதவியுடன் பல்கலைக் கழகம் வளாகத்தில் சோதனையில் ஈடுபட்டனர்.




பல மணி நேர சோதனைக்குப் பிறகு வெடிகுண்டு ஏதும் கிடைக் காதல், அந்த மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது.

இது தொடர்பாக கோட்டூர்புரம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, வெடிகுண்டு இருப்பதாக புரளி கிளப்பி, பதற்றத்தை ஏற்படுத்திய நபரைத் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவத்தால் அண்ணா பல்கலை. வளாகத்தில் நேற்று பர பரப்பு ஏற்பட்டது.





# டில்லியில் இன்றும் கடும் பனிமூட்டம்; பல விமான, ரயில் சேவைகள் இரத்து

டில்லியில் கடந்த சில நாள்க ளாகவே கடுமையான பனிமூட்டம் நிலவுகிறது. இதன் காரணமாக விமான சேவைகள் மற்றும் ரயில் சேவைகள் பாதிக்கப்படுகின்றன.

இதனால், விமான பயணிகள் மற் றும் ரயில் பயணிகள் கடந்த சில நாள்களாகவே கடும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள்.

அடர்ந்த பனிமூட்டம் காரணமாக டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று விமான சேவை கடுமையாக பாதிக்கப்பட்டது. நேற்று 48 விமானங்கள் ரத்து செய்யப் பட்டன. 564 விமானங்கள் தாமதமாக வந்து தரையிறங்கின. மேலும் 95 ரயில்களும் ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதிக்கு உள்ளா னார்கள்.

இந்த நிலையில், டில்லியில் இன் றும் கடும் பனி மூட்டம் நீடித்தது. இதன் காரணமாக இன்றும் விமான சேவைகள் மற்றும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இன்று காலை 10 மணிவரை டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் 7 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும் 150 இற்கும் மேற்பட்ட விமா னங்கள் சுமார் 20 நிமிடங்கள் தாம தமாக டில்லிக்கு வந்தன.





# பாரிய பனிப்பொழிவை எதிர்கொள்ளும் அமெரிக்கா

ஒரு தசாப்த காலத்தின் பின்னர் முதன் முறையாக பாரிய பனிப்பொழிவையும், கடுமையான குளிரையும் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நடுப்பகுதியில் ஆரம்பமான பனிப்புயல் எதிர்வரும் ஓரிரு நாட்களில் கிழக்கு நோக்கி நகரும் என அமெரிக்க தேசிய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

கென்டி மற்றும் தென்கிழக்கு மாநிலமான வேர்ஜீனியா ஆகியவற்றில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது தவிர மிசிசிப்பி மற்றும் புளோரிடா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளும் பாதிக்கப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆர்க்டிக் பிராந்தியத்தின் குளிர்ந்த காற்றின் ஒரு பகுதியான துருவ சுழலினால் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவே இந்த பாரிய காலநிலை தோன்றியுள்ளதாக வானிலை முன்னறிவிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்று காலை டில்லியின் சில பகுதிகள் மூடுபனி, ஏற்பட்டதனால் புகையிரத மற்றும் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் 160 இற்கும் மேற்பட்ட சேவைகளில் 8 சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், ஏனைய சேவைகள் பாதிப்படைந்துள்ளன.











# கொலம்பியாவில் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது சுற்றுலா பஸ்

## 13 பேர் உயிரிழப்பு



கொலம்பியாவில், சுற்றுலா பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலம்பியா நாட்டின் தென் மேற்கே அமைந்துள்ள நெடுஞ்சாலையில் 30 இற்கும் அதிகமான பயணிகளுடன் சென்ற சுற்றுலா பஸ்ஸே விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு வந்த மீட்புக் குழுவினர் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்திய சாலைகளில் சேர்த்தனர். மேலும், இவ் விபத்துக் குறித்து அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 05/01/2025

## வாகனத்தில் பயணம் செய்தவர் மீது சாரதியால் கத்திக்குத்து தாக்குதல்

கனடாவில் வாகனம் ஒன்றில் பயணம் செய்த நபர் ஒருவர் மீது வாடகை கார் சாரதி கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

02





# ஹாலிபெக்ஸ் இரட்டை கொலை சம்பவம் ஒரு குடும்ப வன்முறையென அறிவிப்பு

**புத்தாண்டு மலரவிருந்த நேரத்தில் ஹாலீபெக்ஸ் பகுதியில் பெண் ஒருவரையும் அவரது தந்தையையும் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்தார் என குற்றம் சுமத்தப்பட்ட நபர் தொடர்பில் மேலும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**39 வயதான மேத்யூ கொஸ்டின் என்ற நபரே இந்த படுகொலை சம்பவங்களை மேற்கொண்டுள்ளார். இவர் 40 வயதான கோராளி ஸ்மித் மற்றும் அவரது 73 வயதான பிரட் போர்ட் ஆகியோரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துள்ளார்.**

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் 2019 ஆம் ஆண்டு டொரன் டோவில் இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத் துடன் தொடர்புடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

ஹாலிபெக்ஸ் இரட்டைக் கொலைச் சம்பவத்தின் பின்னர் குறித்த நபர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்த ஹாலிபெக்ட் படுகொலை சம்பவம் ஓர் குடும்ப வன்முறை சம்பவம் எனவும் கொஸ்டினும் கோராளியும் உறவில் இருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




கடந்த 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி டொரன்டோ இரவு நேர கேளிக்கை விடுதி ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கி சுட்டு சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்திருக்கின்றனர்.

கொஸ்டினுக்கு எதிராக இந்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஹாலிபெக்ஸ் பிராந்திய பொலிஸாருக்கு எந்த தகவல்களும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# இரு நிலைப்பாட்டில் கனடிய அரசாங்கம்

## கடுமையாக சாடும் சீனா

கனடிய அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளது என சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

குறிப்பாக மனித உரிமை விவகாரங்களில் கனடா இரு முகங்களை காண்பிப்பதாக சுட்டிக்காட்டி உள்ளது.

கனடாவில் பழங்குடியின சமூகத்தினர் உரிமைகளை கனடா முடக்குவதாக குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் மனித உரிமைகளை காரணம் காட்டி சீன அதிகாரிகளுக்கு எதிராக எவ்வாறு தடை விதிக்கப்பட முடியும் என சீனா கேள்வி எழுப்பியுள்ளது.

சீனாவை சேர்ந்த எட்டு அதிகாரிகளுக்கு கனடிய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

சீனாவில் வாழ்ந்து வரும் உய்குர் சமூகத்தினருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளை கண்டித்து கனடிய அரசாங்கம் இவ்வாறு அதிகாரிகளுக்கு தடை விதித்துள்ளது.



எவ்வாறு எனினும் சீன உள்விவகாரங்களில், கனடா தலையீடு செய்வதாகவும் இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல என சீனா குற்றம் சுமத்தியுள்ளது.




# கனடாவின் 7 மாகாணங்களுக்கு காலநிலை தொடர்பில் எச்சரிக்கை

கனடாவின் ஏழு மாகாணங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கு கால நிலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனிப்பொழிவு மற்றும் மழை ஏற்படக்கூடிய சாத்தியங்கள் தொடர்பில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா, ஒன்றாறியோ, நுணாவட், வட மேற்கு பிராந்தியங்கள், கியூபாக், நியூ ஃபவுன்ட் லேண்ட் அண்ட் லேப்ரடர் ஆகிய மாகாணங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கு இந்த காலநிலை முன் அறிவிப்பு எச்சரிக்கை விரிக்கப்பட்டுள்ளது.



கடுமையான குளிர், பனிப்பொழிவு, பலத்த காற்று மற்றும் கடும் மழை போன்றன தொடர்பில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நியூ பவுண்ட்லாந்து பகுதியில் பலத்த காற்றும் கடும் பனிப்பொழிவும் ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கியூபெக்கில் சுமார் 25 சென்டிமீட்டர்கள் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் என்றும் பிற்பகல் வேளையில் கடும் மழை பொழியும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் இதே விதமாக கடும் பனிப்பொழிவும் மழையும் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யுகுன், பிரிட்டிஷ் கொலம்பியா, வடமேற்கு பிராந்தியங்கள போன்ற பகுதிகளிலும் கடுமையான குளிர், பனிப்பொழிவு மற்றும் மழை தொடர்பில் எச்சரிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




## வாகனத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தாக்குதல் சம்பவத்தில் அந்த நபர் படுகாயம் அடைந்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இரவு 8.30 மணி அளவில் நயகரா பால்ஸ் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 38 வயதான நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த நபர் தனது ஆறு வயது மகளுடன் வாகனத்தில் பயணம் செய்துள்ளார். வாகனத்தின் பின் இருக்கையில் மகள் அமர்ந்திருந்தபோதுசி 17 வயதான வாகன சாரதி அந்த நபர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தியுள்ளார்.

ருவருக்கும் இடையில் வாகனத்திற்குள் வைத்து வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் பின்னர் அது காருக்கு வெளியே கைகலப்பாக மாறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கார் சாரதிக்கும் கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கானவருக்கும் என்ன




தொடர்பு என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

மேற்படி நபரை கத்தியால் குத்திய சாரதி சிறுமியுடன் வாகனத்தில் ஏறி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பொலிஸார் அந்த வாகன சாரதியை மடக்கி பிடித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அவற்றை பொலிஸாருக்கு வழங்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# புலம்பெயர் திட்டம் ஒன்றை இடைநிறுத்தியது கனடா

கனடா அரசு தொடர்ந்து புலம்பெயர்தல் தொடர்பில் பல நடவடிக்கைகளை எடுத்தவண்ணம் உள்ளது.

அவ்வகையில், புலம்பெயர்தல் திட்டம் ஒன்றை இடைநிறுத்தியுள்ளது கனடா.

அதாவது, கனடா அரசின், பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியருக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு ஸ்பான்சர் செய்யும் திட்டத்தை கனடா தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக கனடாவின் புலம்பெயர்தல் துறை அமைச்சரான மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு, 20,500 பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியருக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு ஸ்பான்சர் செய்வதற்கான விண்ணப்பங்கள் பெறும் இலக்குடன், விண்ணப்பம் செலுத்த 35,700 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டின் இறுதி நிலவரப்படி, ஏற்கனவே 40,000 விண்ணப்பங்கள் நிலுவையில் இருக்கின்றன என மார்க் மில்லர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆகவே, ஏற்கனவே விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்காகவே, தற்போது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டியருக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதிக்கு ஸ்பான்சர் செய்யும் திட்டத்தை கனடா நிறுத்தியுள்ளதாக மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக, இத்தகைய விண்ணப்பங்களைப் பரிசீலிக்க, சராசரியாக 24 மாதங்கள் வரை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.



# கனடாவில் இரண்டு வகையான உப்புக்கள் குறித்து எச்சரிக்கை

கனடாவில் இரண்டு வகை உப்புக்கள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரசிடன்ட்ஸ் சொய்ஸ் பண்டக்குறியைக் கொண்ட இரண்டு வகை உப்பு உற்பத்திகள் சந்தையிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

ஹிமாலயன் பின்க் ரொக் சால்ட் மற்றும் மெடிடிரெயியன் சால்ட் என்பனவே இவ்வாறு சந்தையிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

360 கிராம் எடையுடைய பொதிகளில் அடைக்கப்பட்ட உப்பு இவ்வாறு சந்தையிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பொருள்கள் கலந்திருந்தமையினால் இவ்வாறு உப்பு வகைகள் சந்தையிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.